இன்றைய பலன்கள்

'ஜோதிட ரத்னா' கே.பி.வித்யாதரன்

பொதுப் பலன்: தானியங்கள் அறுவடை செய்ய, நீர், நிலைகளை ஆழப்படுத்த, வழக்குகள் பேசி முடிக்க நன்று.

மேஷம்: குடும்பத்தில் ஆரோக்யமான விவாதங்கள் வந்துப் போகும். மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மதியம் 12.50 மணி முதல் சந்திராஷ்டமம் தொடங்குவதால் தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

ரிஷபம்: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்யோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

மிதுனம்: குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவுப் பெருகும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்யோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

கடகம்: பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். கடனை தீர்க்க புது வழி பிறக்கும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புது வேலைக் கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சனை தீரும். உத்யோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

சிம்மம்: திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்வீர்கள். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். சவாலில் வெற்றி கிட்டும் நாள்.

கன்னி: குடும்பத்தாரின் ஆதரவுப் பெருகும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்யோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கிகாரம் கிடைக்கும். நிம்மதியான நாள்.

துலாம்: மதியம் 12.50 மணி வரை ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். சொந்தங்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உத்யோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. மாலையில் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும் நாள்.

விருச்சிகம்: விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்களால் அலைச்சல், டென்ஷன் வந்துப் போகும். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். மதியம் 12.50 மணி முதல் ராசிக்குள் சந்திரன் செல்வதால் எதிலும் நிதானம் தேவைப்படும் நாள்.

தனுசு: குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பயணங்கள் திருப்திகரமாக அமையும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். இனிமையான நாள்.

மகரம்: தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன் பிறந்தவர்களின் பிரச்னையை தீர்த்து வைப்பீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

கும்பம்: கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்தவரை சந்திப்பீர்கள். வாகனப் பழுது நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் உதவுவார்கள். உத்யோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உற்சாகமான நாள்.

மீனம்: மதியம் 12.50 மணி வரை சந்திராஷ்டமம் தொடர்வதால் பழைய நினைவுகளில் மூழ்குவீர்கள். வெளி வட்டாரத்தில் பெரிய பொறுப்புகளை உங்களை நம்பி ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். மாலையில் தடைகள் நீங்கும் நாள்.

அண்ணாசாலையில் உள்ள

காதி விற்பனையகத்தில் தீ விபத்து

▶ தீ விபத்தில் எரிந்து நாசமான பொருட்கள்.

பொருட்கள் எரிந்து நாசம்

சென்னை, பிப்.18: மத்திய அரசின் காதி கிராமோத்யோக் பவனில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் மதிப்புள்ள பொருட்கள் நாசமான சம்பவம் அண்ணாசாலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னை அண்ணா சாலையில் மத்திய அரசு கட்டுப்பாட்டில் செயல்படும் காதி கிராமோத்யோக் பவன் உள்ளது. இங்கு, இரண்டு மாடி கட்டிடத்தில் கைத்தறி ஆடைகள், அலங்கார பொம்மைகள், கொலு பொம்மைகள் மற்றும் தோல் பொருட்கள், வீட்டிற்கு தேவையான பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

நேற்று காலை விற்பனை மையம் வழக்கம் போல் தொடங்கியது. 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் விற்பனை மையத்தில் இருந்தனர். அப்போது மேல் தளத்தில் உள்ள கொலு பொம்மைகள் விற்பனை மையத்தில் இருந்து திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அதிர்ச்சியடைந்த ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. சிறிது நேரத்தில் தீ மளமளவென மேல் தளம் முழுவதும் தீ பரவியது.

தகவலறிந்து, எழும்பூர், திருவல்லிக்கேணி, வேப்பேரி பகுதிகளில் இருந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து, அரை மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். ஆனால், அதற்குள் மேல் தளத்தில் இருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து நாசமானது. மற்ற தளங்களில் தீ பரவாமல் தடுக்கப்பட்டதால் அங்குள்ள பலலட்சம் மதிப்பு பொருட்கள் தப்பியது.

இதுகுறித்து திருவல்லிக்கேணி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்கட்ட விசாரணையில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

மாணவர்கள் திடீர் மோதல்

சென்னை, பிப்.18: பிராட்வேயில் இருந்து நேற்று முன்தினம் மாலை (தடம் எண்.15 எப்) மாநகர பஸ் ஒன்று வடபழனி நோக்கி சென்றது. விருகம்பாக்கம் அருகே சென்றபோது, இதில், பயணித்த பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 4 பேர் மற்றும் மாநில கல்லூரி மாணவர்கள் 6 பேர் திடீரென ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். உடனே பேருந்து நிறுத்தப்பட்டது. பயணிகள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடினர்.

இதில் மாநில கல்லூரியில் பி.காம் இரண்டாம் ஆண்டு படித்து வரும் வினோத் என்ற மாணவன் படுகாயமடைந்தார். தகவலறிந்து வந்த விரும்பாக்கம் போலீசார், காயமடைந்த வினோத்தை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர்.

இதுகுறித்து வழக்கு பதிவு செய்த போலீசார், மோதல் தொடர்பாக 2 மாணவர்களை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஹேவல்ஸ் நிறுவனம் சார்பில்

8 இறக்கை கொண்ட மின்விசிறி அறிமுகம்

சென்னை, பிப்.18: எப்எம்ஜி துறையில் முன்னணியில் உள்ள ஹேவல்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், அதிக காற்று வீசும் திறனுடன் 8 இறக்கைகள் கொண்ட 'ஆக்டெட்' என்ற மின்விசிறியை இந்தியாவில் முதன்முதலாக அறிமுகம் செய்துள்ளது. இது, ஐஓஎஸ் அல்லது ஆண்ட்ராய்டு ஸ்மார்ட் போன் மூலம் இயக்கக்கூடிய புளூடூத் தொழில்நுட்ப திறன் கொண்ட இந்தியாவின் முதல் ஸ்மார்ட் மின்விசிறி 'பியூச்சுரோ', வழக்கமான மின்விசிறியை விட 57 சதவீத அதிக ஆற்றல் கொண்ட பிஎஸ்டிசி தொழில்நுட்ப மின்விசிறி 'எபிசியன்சியா', 32 வாட்ஸ் மின் சக்தியை மட்டும் பயன்படுத்தும்.

தூசி அதிகம் சேராமல் தடுக்க டஸ்டோ-போபிக் மெட்டாலிக் பெயின்ட் பூச்சு கொண்ட இந்த மின்விசிறியை சுத்தப்படுத்துவது எளிதானது. மேலும், நவீன தொழில்நுட்பம் கொண்ட அர்பேன் மற்றும் என்டைசர் ஆர்ட் என்ற இரு வேரியண்டுகளையும் இந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து ஹேவல்ஸ் இந்தியா நிறுவன செயலாக்க துணை தலைவர் கூறுகையில், 'இன்றைய காலத்திற்கு ஏற்பவும், வாடிக்கையாளர்களை கவரும் வகையிலும், நவீன தொழில்நுட்பத்தில் இந்த மின்விசிறி அறிமுகம் செய்யப்படுகிறது,' என்றார்.

ஆக்சம்பர்க் நவீன ஆடைகள்

சென்னை, பிப்.18: ஆண்களை கவரும் வகையில் நவநாகரீக ஆடைகளை அறிமுகம் செய்யும் ஆக்சம்பர்க் நிறுவனம், ஆண்டுதோறும் பலவித உத்திகளை கையாண்டு வருகிறது. ஆக்சம்பர்க்கின் அடுத்தகட்ட நகர்வாக "மேக் யுவர் விஷன்" என்ற உத்தியை மையவாடிக்கையாளர்களை குறிவைத்து கையாண்டு வருகிறது.

இதற்காக தாய்லாந்து நாட்டின் ஹுவா ஹின் கடற்கரையில் சர்வதேச மாடல்களை கொண்டு தத்ரூப காட்சிகளுடன் விளம்பரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஊரக பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு, அவர்களது சூழலுக்கேற்ப இளமையுடனும், புத்துணர்வுடனும் தோற்றம் அளிக்கும் வகையில் ஆடைகள் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து சியாரம் சில்க் நிறுவனத்தின் செயல் இயக்குநர் கவுரவ் பாடர் கூறுகையில், "தரம், ஸ்டைல் மற்றும் நேர்த்தியான தோற்றம் அளிக்கும் இதுபோன்ற ஆடைகளை இந்திய சந்தைக்கு ஏற்ப ஆக்சம்பர்க் வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் தங்களுக்கு ஏற்ற சிறந்த வண்ணங்களில் நேர்த்தியான ஆடைகளை தேர்வு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்," என்றார்.

நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம்

சென்னை, பிப்.18: வக்கீல்கள் சங்கத்தின் தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வக்கீல்கள் மீது போலீசார் நடத்திய தடியடி சம்பவம் நடந்த நாளை வக்கீல்கள் கருப்பு நாளாக அனுசரித்து வருகிறார்கள். இதையடுத்து, வரும் 20ம் தேதி கருப்பு தினமாக வக்கீல்கள் அனுசரிக்க சங்கம் தீர்மானித்துள்ளது. அன்று வக்கீல்கள் நீதிமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஆவடி-**ரெமி** A/c dts., ஓரகடம்-**குமரன்** A/c dts., பொன்னேரி-**வெற்றிவேல்** A/c dts., குன்றத்தூர்-**பாரிமளம்** A/c dts., அனகாபுத்தூர்-**கணேஷ் & அருண்மதி** A/c dts., ஆலந்தூர்-**S.K. மெர்லின்** A/c dts., ஊத்துக்கோட்டை-**AVM** A/c dts., மதுராந்தகம்-**RK & SR** A/c dts., ரெட்ஹில்ஸ்-**ஸ்ரீ ராதா மூவி பார்க்** A/c dts., திருத்தணி-**துர்கா & கோல்டன்** A/c dts., பல்லாவரம்-**ஜனதா** A/c dts., கங்குவார்சத்திரம்-**ராம்தாஸ்** A/c dts., மணலி-**மீனாட்சி** A/c dts., மீஞ்சூர்-**K.K. சினிமாஸ்** A/c dts., காரப்பாக்கம்-**அரவிந்த்** A/c dts., திருநின்றவூர்-**வேலா சினிமாஸ்** A/c dts., திருவொற்றியூர்-**ஓடியன்மணி** A/c dts., அச்சரப்பாக்கம்-**பாலாஜி** A/c dts., திருக்கழுகுன்றம்-**ஸ்ரீபுவனேஸ்வரி** A/c dts., திருவாலங்காடு-**மெட்ரோ** A/c dts., திருப்போரூர்-**அருள்முருகா** A/c dts., அனகாபுத்தூர்-**அருண்மதி** A/c dts., மாமண்டூர்-**C3** A/c dts., படப்பை-**கண்ணப்பா** A/c dts., ஊத்துக்கோட்டை-**ஸ்ரீ குமாரி** A/c dts., மேடவாக்கம்-**குபரன்** A/c dts., திருநின்றவூர்-**லட்சுமி** A/c dts., திருவொற்றியூர்-**MSM** A/c dts., வில்லிவாக்கம்-**நாதமுனி** A/c dts., உத்திரமேரூர்-**சேகர்** A/c dts., பொன்னேரி-**கௌரி & வெற்றிவேல்** A/c dts., கும்மிடிப்பூண்டி-**ஸ்ரீ இராஜேஸ்வரி** A/c dts., மூலக்கடை-**ஸ்ரீ சண்முகா** A/c dts., விருகம்பாக்கம்-**தேவி கருமாரி** A/c dts.

பராமரிப்பு பணி காரணமாக

கும்மிடிப்பூண்டி ரயில்கள் ரத்து

சென்னை, பிப்.18: சென்னை - சூலூர்பேட்டை வழித்தடத்தில் பொன்னேரி ஓதுங்கு வழித்தடத்தில் பராமரிப்பு பணி நடைபெற உள்ளதால் நாளை (19ம் தேதி) கும்மிடிப்பூண்டியில் இருந்து காலை 10.50 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரும் மின்சார ரயில் முழுமையாக ரத்து செய்யப்படும்.

*சென்னை சென்ட்ரலில் இருந்து அதிகாலை 12.15, 6.00, 7.00, 8.10, 9.00 மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரயில்கள் மீஞ்சூர் - கும்மிடிப்பூண்டி இடையேயும், அதிகாலை 4.20, காலை 5.00, 5.30, 7.30, 8.35 மணிக்கு புறப்பட்டு சூலூர்பேட்டை செல்லும் மின்சார ரயில்கள் மீஞ்சூர் - கும்மிடிப்பூண்டி இடையேயும், காலை 7.45 மணிக்கு புறப்பட்டு நெல்லூர் செல்லும் ரயில் சென்னை சென்ட்ரல் - கும்மிடிப்பூண்டி இடையேயும் பகுதியாக ரத்து செய்யப்படுகிறது.

* சென்னை கடற்கரையில் இருந்து காலை 5.30 மணிக்கும், திருவள்ளூரில் இருந்து காலை 5.20 மணிக்கும் புறப்பட்டு பொன்னேரி செல்லும் ரயில்கள் மீஞ்சூர் - பொன்னேரி இடையே பகுதியாக ரத்து செய்யப்படுகின்றன.

* கும்மிடிப்பூண்டியில் இருந்து அதிகாலை 2.45, 4.55, காலை 5.20, 5.50, 6.55, 7.55, 8.25, 9.50 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரும் மின்சார ரயில்களும், காலை 8.50 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரைக்கு வரும் மின்சார ரயிலும் கும்மிடிப்பூண்டி - மீஞ்சூர் இடையே பகுதியாக ரத்து செய்யப்படும்.

*சூலூர்பேட்டையில் இருந்து காலை 5.45 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரவேண்டிய மின்சார ரயில் கும்மிடிப்பூண்டி - மீஞ்சூர் இடையே பகுதியாக ரத்து செய்யப்படும். பொன்னேரியில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு வேளச்சேரிக்கும், காலை 8 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரலுக்கும் வரும் மின்சார ரயில்கள் பொன்னேரி - மீஞ்சூர் இடையே பகுதியாக ரத்து செய்யபடும்.

பராமரிப்பு பணி காரணமாக எதிர் பாதையில் ரயில்கள் இயக்கப்படுவதால் சென்னை - ஸ்ரீமாதா வைஷ்ணதேவி கட்ரா அந்தமான் எக்ஸ்பிரஸ் 35 நிமிடங்களும், சென்னை சென்ட்ரல் - நிஜாமுதீன் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் 40 நிமிடங்களும், சென்னை சென்ட்ரல் - விஜயவாடா ஜனசதாப்தி எக்ஸ்பிரஸ் 40 நிமிடங்களும், சென்னை சென்ட்ரல் - சந்திரகாசி எக்ஸ்பிரஸ் 50 நிமிடங்களும், சென்னை சென்ட்ரல் - அவுரா கோரமண்டல் எக்ஸ்பிரஸ் 40 நிமிடங்களும், மதுரை -நிஜாமுதீன் சம்பர்க்கிராந்தி எக்ஸ்பிரஸ் 30 நிமிடங்களும், சென்னை சென்ட்ரல் - அகமதாபாத் நவஜீவன் எக்ஸ்பிரஸ் 20 நிமிடங்கள் தாமதமாக கூடூர் சென்றடையும்.

சென்னை-அரக்கோணம் ரயில் சேவையில் மாற்றம்:

சென்னை - அரக்கோணம் வழித்தடத்தில் வில்லிவாக்கம் - அம்பத்தூர் ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெறுவதால் இன்று (18ம் தேதி) திருத்தணியில் இருந்து இரவு 9.40 மணிக்கும், அரக்கோணத்தில் இருந்து 9.45 மணிக்கும், பட்டாபிராம் சைடிங்கில் இருந்து இரவு 10.45 மணிக்கும் புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரும் மின்சார ரயில்கள் விரைவு ரயில்பாதையில் இயக்கப்படுவதால் பட்டாபிராம், இந்து கல்லூரி, அண்ணனூர், திருமுல்லைவாயல், அம்பத்தூர், பட்டரவாக்கம், கொரட்டூர் ரயில் நிலையங்களில் நிற்காமல் வரும்.

நாளை (19ம் தேதி) பட்டாபிராம் சைடிங்கில் இருந்து அதிகாலை 3.20 மணிக்கு புறப்படும் மின்சார ரயில் ஆவடியில் 20 நிமிடங்கள் கூடுதலாக நிறுத்தப்பட்டு சென்னை சென்ட்ரலுக்கு தாமதமாக வந்து சேரும்.

ஆவடியில் இருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரும் மின்சார ரயில் 5 நிமிடங்கள் தாமதமாக புறப்படும். ஆவடியில் இருந்து காலை 4.10 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரை வழியாக வேளச்சேரி செல்லும் மின்சார ரயில் 5 நிமிடம் தாமதமாக புறப்பட்டு செல்லும்.

மங்களூர் ரயில்கள் தாமதம்:

சென்னை - ஜோலார்பேட்டை வழித்தடத்தில் குடியாத்தம் - விண்ணமங்கலம் ரயில் நிலையங்களுக்கு இடையில் நாளை (19ம் தேதி) முதல் மார்ச் 11ம் தேதி வரை ரயில்பாதை மேம்பாட்டு பணிகள் நடைபெற உள்ளதால், சென்னை சென்ட்ரல் - மங்களூர் மேற்கு கடற்கரை எக்ஸ்பிரஸ் ரயில் பிப்.24, மார்ச் 3, 10 ஆகிய தேதிகளில் வளத்தூர் ரயில் நிலையத்தில் 15 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு தாமதமாக ஜோலார்பேட்டை சென்றடையும்.

அதேபோல் சென்னை சென்ட்ரல் - மங்களூர் மேற்கு கடற்கரை எக்ஸ்பிரஸ் ரயில் பிப்.19, 20, 21, 22, 25, 26, 27, 28, மார்ச் 1, 4, 5, 6, 7, 8,11 தேதிகளில் காட்பாடியில் 80 நிமிடங்களும், மேல்பட்டியில் 30 நிமிடங்களும் கூடுதலாக நிறுத்தப்பட்டு 120 நிமிடங்கள் தாமதமாக ஜோலார் பேட்டை சென்றடையும்.